செய்தி வெளியீடு எண்: 1153 நாள் : 1153

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்**
**காணொலிக் காட்சி வாயிலாக**
**மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன்**
**வெள்ள நிவாரண பணிகள் குறித்து ஆய்வு !**

இன்று (31–12–2010) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் காணொலிக் காட்சி வாயிலாக (வீடியோ கான்பரன்சிங்) வெள்ள நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வு செய்தார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 மாவட்டங்களின் ஆட்சியர்கள் இந்த ஆய்வில் கலந்து கொண்டு மாவட்டங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகள் குறித்து விளக்கமளித்தனர்.

இந்த ஆய்வில், துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எஸ். வீரபாண்டி ஆறுமுகம், வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், பால் வளத் துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன், தலைமைச் செயலாளர் திருமதி எஸ். மாலதி, ஐ.ஏ.எஸ்., வருவாய் நிர்வாக ஆணையர் திரு. ந. சுந்தரதேவன், ஐ.ஏ.எஸ்., வருவாய்த் துறைச் செயலாளர் திரு. வி.கு. ஜெயக்கொடி, ஐ.ஏ.எஸ்., நிதித் துறைச் செயலாளர் திரு. க. சண்முகம், ஐ.ஏ.எஸ்., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் திரு. க. அசோக் வர்தன் ஷெட்டி, ஐ.ஏ.எஸ்., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளர் திரு. கா. அலாவூதீன், ஐ.ஏ.எஸ்., வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு. பா. இராமமோகன ராவ், ஐ.ஏ.எஸ்., நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள்துறைச் செயலாளர் திரு. கோ. சந்தானம், ஐ.ஏ.எஸ்., பொதுப்பணித் துறைச் செயலாளர் திரு. கி. தனவேல், ஐ.ஏ.எஸ். ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆய்வைத் தொடங்கி வைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

“கழகம் ஆட்சிக்கு வந்தால் மழை பொழியாது என்று ஒரு தவறான பிரச்சாரத்தை தமிழ்நாட்டிலே சில பேர் செய்து கொண்டிருந்த அந்த நிலையைப் பொய்யாக்கி, அண்மையில் மாதம் மும்மாரி பெய்த சூழ்நிலையில், விழுப்புரம், கடலூர், நாகை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய கடலோர மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. நன்மைகளும், தீமைகளும் உண்டு என்ற வகையில் நாம் அந்தப் பாதிப்புகளை உணர்கின்றோம். அந்த வகையில் இந்த மழையின் காரணமாக, 203 பேர் இறந்துள்ளனர். ஏராளமான வீடுகளும், பயிர்களும் சேதமடைந்துள்ளன.

ஏரிகள், குளங்கள், சாலைகள், போன்ற நீர்நிலைகளும் சேதத்திற்கு ஆட்பட்டுள்ளன.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரண உதவிகள் வழங்கிடவும், சேதமடைந்த வீடுகளும், சாலைகள் முதலானவும் செப்பனிடப்படவும் அரசு விரைவு நடவடிக்கை மேற்கொண்டு உரிய அறிவுரைகளை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது.

அமைச்சர் பெருமக்களும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் நேரில் சென்று பாதிக்கப்பட்ட இடங்களையெல்லாம் பார்வையிட்டு, அங்குள்ள மக்களுக்கு ஆறுதல்கூறி நிவாரண உதவிகளை விரைவுபடுத்தினர்.

பாதிக்கப்பட்ட மக்கள் பாதிப்பிலிருந்து மீள்வதற்கு அரசின் உதவிக்கரம் தாராளமாக நீள வேண்டும் என்ற உணர்வோடு உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவியை ஒரு இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக இந்த அரசு உயர்த்தி வழங்கியுள்ளது.

ஓரளவு பாதிப்படைந்த குடிசைகளுக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபாய் என்றும்;

முழுமையாக பாதிப்படைந்த குடிசை– களுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் என்றும்;

வெள்ளம் சூழ்ந்த மாவட்டங்களில் ஓரளவு பாதிப்படைந்த குடிசைகள் அல்லாத பிற வீடுகளுக்குத் தலா 1500 ரூபாய் என்றும்;

குமரி மாவட்டத்தில் மாத்திரம் அதிகமாக பாதிப்பு அடைந்த குடியிருப்புகளுக்குத் தலா 5 ஆயிரம் ரூபாய் என்றும்;

சேதமடைந்த நெற்பயிர்களுக்கு எக்டேர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும்; நெற்பயிர் அல்லாத பிற பாசனப் பயிர்களுக்கு எக்டேருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாய் என்றும்; மானாவாரிப் பயிர்களுக்கு எக்டேருக்கு 4 ஆயிரம் ரூபாய் என்றும்;

இறந்த மாடு ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றும்; கன்றுக்குட்டி ஒன்றுக்கு 5 ஆயிரம் ரூபாய் என்றும்; ஆடுகளுக்குத் தலா 1000 ரூபாய்; கோழிகளுக்குத் தலா 30 ரூபாய் என்றும்; மீனவர்களின் படகு, கட்டுமரம், வலை முழுதும் பாதிக்கப்பட்டிருந்தால் அவற்றைப் புதிதாக வாங்க 7 ஆயிரத்து 500 ரூபாய்; ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தால் 2 ஆயிரத்து 500 ரூபாய் – என நிவாரண உதவிகளை உயர்த்தி வழங்க ஆணைகளிட்டு மாவட்ட ஆட்சியர்கள் ஆற்றுப் படுத்தப்பட்டார்கள்.

மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப் பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள 1832 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டு மத்திய அரசுக்கு இந்த அரசு அறிக்கை அனுப்பியுள்ளது.

மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க வருகைதந்து தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்ட மத்திய குழு தனது அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்த பின்னர், மத்திய அரசின் உதவி கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், தமிழக அரசு வெள்ளத்தில் பாதிப்படைந்த பயிர்களுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க முதற்கட்டமாக 300 கோடி ரூபாயும், வீடுகள், சாலைகள் முதலியவற்றின் சேதங்களை உடனடியாகச் சீர்செய்ய 200 கோடி ரூபாயும் என மொத்தம் 500 கோடி ரூபாயை அனுமதித்துள்ளது.

இந்தத் தொகையைப் பயன்படுத்தி, அரசு வழங்கிய அறிவுரைகளுக்கேற்ப மாவட்ட ஆட்சியர்களும், அலுவலர்களும், பணியாளர்களும் விரைந்து செயல்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணையாக நின்று, ஊக்கம் தந்து உதவிகளை

வழங்கியுள்ளார்கள் எனும் செய்திகளை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன் என்றாலும்கூட, ஒவ்வொரு மாவட்டத்திலும் நேர்ந்த இழப்புகளையும், அவற்றுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகளையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நேரடியாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

தேவைப்படும் உதவிகளுக்காகத் தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு வசதியாக மாவட்ட வாரியாக விவரங்களை எனக்கு வழங்கிடுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்."சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆய்வின்போது, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நிவாரணப் பணிகள் அனைத்தையும் 2011 ஜனவரி 5 ஆம் தேதிக்குள் நிறைவு செய்யுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.